திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, 90 நகரசபைகளிலும் சேர்ந்து 246 டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 100 பேர் மாக்ஸிமம் ரீச் பண்ணிவிட்டார்கள். அவர்கள் சம்பந்தமாக பே கமிஷன் . . .

Is it not a fact that the Director of Town Planning has made some recommendations to the Secretary and the matter is pending with the Secretary for more than six months ?
என்று கூறியிருக்கிறது. ஆகவே உடனடியாக அரசு, டைரக்டர் ஆஃப் டவுன் பிளானிங் செய்த சிபாரிசை அமுல் நடத்த வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நகராட்சி இயக்குநர் ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரை அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவிலே தக்க முடிவு எடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

Post-Graduate Diploma Course in Psychiatry

* 533 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce a Post-Graduate Diploma Course in Psychiatry in the Medical Colleges in Madras; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சென்னை மருத்துவக் கல்லூரியில் ஏப்ரல் 1972-லிருந்து ஓராண்டு டிப்ளமோ படிப்பு, மனநிலை மருத்துவம் நடைபெறும். ஆண்டுக்கு ஆறு மாணவர்கள் வீதம் சேர்த்துக் கொண்டு துவக்கப்படும்.

திரு. என். கே. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, இந்தமாதிரியான மன நிலைநோய்பற்றி கற்றுத் தேறுவதற்கு அதிகமான நாள் பிடிக்கும் என்பதால் அதிகமான மாணவர்கள் சேர்ந்து படிக்க முன்வருவதில்லை. ஆகவே, அந்த மாணவர்களுக்கு அதிக்கப்படியான உபகாரச் சம்பளங்களைக் கொடுத்து, அதிக மான மாணவர்களைச் சேர்க்க வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு பிரச்சினை எழவில்லை. இப்போது மாணவர்கள் பலர் சேர முன்வருவதால் இடம் இல்லை என்று சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, பெ
இண்டியா இன்ஸ்ட்டிட்யூட்' இருக்கிறது. அதேபோல இங்கே
அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தமிழ்நாட்டிலுள்ள மனநோய மருத்துவ மனை அகில இந்தியாவிலும் சிறப்புடையதாக இருக்கிறது. சிறப்பு பயிற்சி பெற்ற பலர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். "சைக்யாட்ரி" சிறப்பு பயிற்சி தகுதியுடையவர்களும் இருக்கிறார்கள். பெங்களூரில் உள்ள அளவுக்கு இது சிறப்பாக இயங்குகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

செவிலியர்களுக்கு அடையாள எழுத்துக்கள்

*534 வின.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவ மனையில் பணிபுரியும் நர்சுகளுக்கு அடையாளத்துக்காக M.N.S. எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளதை மாற்றி T.N.S. என ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசாங்க மருத்துவமனைகளில் பணி புரியும் ஆண் செவிலியர் அணியும் 'M.N.S.' (Madras Nursing Service) என்ற அடையாள எழுத்துக்களை 'T.N.N.S.' (Tamil Nadu Nursing Service) என்று உடனடியாக மாற்றும்படி நலப்பணிகள் மற்றும் குடும்பநலத்துறை இயக்குநருக்கும், மருத்துவக் கல்வி இயக்குநருக்கும் அரசாங்கத்தால் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, மருத்துவத் துறையின் பல் வேறு பிரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ள அடையாளச் சின்னங்களில் ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அதை மாற்றி, தமிழ் எழுத்துக்கள் பொறிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ் எழுத்துக்கள் வழங்குவதில் தடை இல்லை. ஆனால் ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிற ஆங்கில எழுத்துக்கள் தெளிவாக இருப்பதோடு, அதை இப்போது மாற்ற முயன்றால் தெளிவு குறைவாக இருக்கும் என்று கருதப்படுகிறது. காலக்கிரமத்தில் இந்த மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையில் நர்சு களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் 30 ரூபாய் அலவன்ஸை ரத்து செய்யப் போகி றார்கள் என்று சொல்வது உண்மையா ? அதை ரத்து செய்யாமலிருக்க வழி வகை செய்யப்படுமா ?